# இயேசுவேவாரும்

காலேப் யோசுவா
செல்: 9444701953, 9444709980
மின்னஞ்சல் : brocalebjoshua@gmail.com
வலைத்தளம்: www.yesuvaevaarum.com
முகநூல்: www.facebook.com/yesuvaevaarum

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி.22.20

32, ஜெமி எத்திராஜ் நகர்,
எரையமங்கலம் ரோடு,
மப்பேடு, பேரம்பாக்கம் (வழி)
திருவள்ளூர் மாவட்டம் - 631402

## திரித்துவ ஸ்தாபன சபை மற்றும் அதன் ஊழியர்கள் குறித்து பரிசுத்த வேதாகமத்தில் ஏன் இத்தனை எச்சரிக்கைகள்?

1. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்ட காலேப் யோசுவா எழுதிறதாவது:சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசம் உள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்கும் இராதபடிக்கு நீங்கள் திரித்துவ உபதேசத்தைக்குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருங்கள். நீங்கள் விசுவாசத்தோடு தியானித்தால், இந்த நிருபத்தின் வாயிலாக நீங்கள் சத்தியத்தை நிச்சயமாக அறிய முடியும். சத்தியமும் உங்களை விடுதலையாக்கும். விசுவாசமில்லாமல் இதை நீங்கள் நூறு முறை படித்தாலும் அது உங்களுக்கு பிரியோஜனமாக இருக்காது.

2. நீங்கள் என்னை தெரிந்துக்கொள்ளவில்லை. நான் உங்களை தெரிந்துக்கொண்டேன். (யோ.15:16) கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காக, கர்த்தர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார் (எபே.4:12,13) இப்பொழுது கர்த்தரால் ஏற்படுத்தப்படாத, தேவசித்தத்திற்கு புறம்பாக, தன் சுய புத்தியின் மேல் சார்ந்து, தேவனுக்கென்று ஒரு ஊழியம் செய்யும் திரித்துவ ஸ்தாபன சபை மற்றும் தனிப்பட்ட திரித்துவ கிறிஸ்தவ ஊழியர்களை குறித்து: தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிற வேத வாக்கியங்களில் நமக்கு கொடுக்கப்பட்ட எச்சரிக்கைகள் பல உண்டு. இதுக்குறித்து நாம் சற்று சுருக்கமாக இங்கு தியானிப்போம். அது உங்கள் ஆத்துமாவுக்கு பிரியோஜனமாக இருக்கும் என கிறிஸ்துவுக்குள் நான் நம்புகிறேன்.

**3. மேற்கண்ட இந்த தியானத்திற்கடுத்த பொருளில்:**

அ. ஸ்தாபன சபையை சார்ந்த மற்றும் ஆங்காங்கு மக்கள் வசிக்கும் இடங்களில் சந்து பொந்துகளில் பற்பல பேர் பலகைகளில் காணப்படும் திரித்துவ, இருத்துவ, ஒருத்துவ விசுவாச பிரமாணத்தின் கீழ் செயல்படும் சபைகள் அதில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் தனிநபர் ஊழியர்கள் இதில் அடங்குவார்கள்.

ஆ. மேலும் இதில் தங்களை தாங்களே பற்பல அழைப்புகளின் பேரில், அதாவது பிரதம பேராயர்,பேராயர், சபை ஸ்தாபகர், தலைமை போதகர், டாக்டர், தீர்க்கதரிசி, அப்போஸ்தலன், இண்டர்நேஷனல் பிரசங்கி, பாஸ்டர் என அழைத்துக்கொள்ளும்திரித்துவ கள்ளகபடமுள்ள வேலையாட்கள் அனைவரும் அடங்குவார்கள்.

இ. இதோடுமட்டுமல்ல, இயேசு அழைக்கிறார், இயேசு ஜீவிக்கிறார், இயேசு விடுவிக்கிறார், இயேசு சுகமளிக்கிறார், இயேசு இரட்சிக்கிறார், இயேசு வருகிறார், மணவாட்டி கூடாரம், கிறிஸ்து இயேசுவின் சுய ரத்தத்தினால் சம்பாதிக்கப்பட்ட சபை, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் திருச்சபை, எழுப்புதல் அக்கினி திருச்சபை, பரலோக அக்கினி சபை, அக்கினி கிறிஸ்தவ சபை, ஏல்-ஷடாய் ஏ ஜி சபை, இயேசுவுக்கே புகழ் திருச்சபை, நித்திய மகிமையின் திருச்சபை, அப்போஸ்தலர் திருச்சபை, இயேசு நம்மோடு சபை, இயேசுவின் வாசனை திருச்சபை, பரிசுத்தவான்களின் சபை என இதுபோன்று இயேசுவின் பேரில் கட்சிகளை / ஸ்தாபனங்களை தொடங்கி அதற்கு தங்களை தலைவனாக்கி / பிஷப் ஆக்கிக் கொண்டு, ஒருவனை தங்கள் மார்க்கதானாகும்படி சமுத்திரத்தையும், பூமியையும் சுற்றித்திரிந்து சாதூரியமான, நயவசனிப்பான பேச்சினால் ஜனங்களை ஆதாயப்படுத்தி பல திட்டங்களை அவர்கள் முன் வைத்து நன்கொடை, காணிக்கை என்ற வேட்டையின் கொள்ளையினால் பணம் சேகரித்து சுகபோகமாக வாழ்ந்து, அவர்களை தங்களிலும் இரட்டிப்பான நரகத்தின் மகனாக்கி அவர்களை கொள்ளையடிக்கும் கொள்ளை கூட்டத்தினரும் இதில் அடங்குவார்கள். சபைகளின் பெயர்களுக்கு மாத்திரம் குறைச்சல் இல்லை, கவர்ச்சியாக இருக்கிறது. ஆனால் ஒய்யார

கொண்டையிலே தாழம் பூவாம், ஆனால் உள்ளே இருக்கிறதாம் ஈறும் பேணும் என்ற பழமொழி தான் இந்த சபைகளுக்குப் பொருந்தும்.

4. இவ்வாறாக உலகம் அனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பத்தின் தூதர்கள்: நீதியின் ஊழியக்காரர்களுடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டதிரித்துவ ஸ்தாபன சபை, அதன் ஊழியக்காரர்கள்மற்றும்திரித்துவ தனிநபர் ஊழியர்கள் நம் மத்தியில் உண்டு. அவர்களை குறித்துதான் பரிசுத்த வேதாகமத்தில் பல எச்சரிப்புக்கள் உள்ளன.

5. என்னில் உள்ள கிறிஸ்துவினுடைய சத்தியத்தை கொண்டு இந்த நிருபத்தை எழுதுகிறேன். சபையானது பெந்தேகொஸ்தே நாளன்று, பேதுருவின் பிரசங்கத்தை கேட்டு, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, ஏறக்குறைய மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்றனர், அவ்வாறாக இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். (அப்.2:37-47) அப்போஸ்தலர்கள் தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கித்தார்கள். (அப்.5:42) பிரசங்கித்ததோடு மாத்திரம் அல்ல, அதை திருஷ்டாந்தப்படுத்தினார்கள். (அப்.17:3) அடுத்து கிறிஸ்து இயேசுவை கர்த்தர் என்று பிரசங்கித்தார்கள். (2கொரி.4:5) ஆக இயேசுவே, கர்த்தராகிய கிறிஸ்து. (லூக்.2:11) கவனியுங்கள்: நானே கர்த்தர், வேறொருவரும் இல்லை, என்னைத்தவிர தேவன் இல்லை, என்னை தவிர ஒருவரும் இல்லை. நானே கர்த்தர், வேறொருவரும் இல்லை. (ஏசா. 45:5,6)தேவனும் அவரே, கர்த்தரும் அவரே. தேவன் ஒருவர், கர்த்தர் மற்றொருவர் இல்லை. மேலும் மூன்று தேவர்கள் மற்றும் மூன்று கர்த்தர்கள் இல்லை.

6. வேதவாக்கியங்கள் இவ்வாறுசாட்சி கொடுக்க: பிதா தேவன், குமாரன் தேவன், பரிசுத்தஆவி தேவன்.ஆனால் மூன்று தேவர்கள் இல்லை,ஒரே தேவன்: பிதா கர்த்தர், குமாரன் கர்த்தர், பரிசுத்த ஆவி கர்த்தர், ஆனால் மூன்று கர்த்தர்கள் இல்லை. ஒரே கர்த்தர் என்கிற உபதேசம் எங்கிருந்து வந்தது? பிசாசினிடமிருந்து தானே? இவன் தானே வேதவாக்கியங்களை புரட்டுகிறவன். இப்பொழுது கவனியுங்கள்: நீ என்னையன்றி வேரே தேவனை அறிய வேண்டாம், என்னையன்றி இரட்சகர் ஒருவரும் இல்லை. (ஓசி.13:4) இஸ்ரவேலின் இரட்சிப்பு எங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் இருக்கிறது. (எரே.3:23) பாருங்கள்: இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் (லூக்.2:11) இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர். (1கொரி.15:47) இயேசு: நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன். (யோ.6:38) பரலோகத்தில் இருந்து இறங்கினவரும், பரலோகத்தில் இருக்கிறவருமான மனுஷகுமாரன் (யோ.3:13) அக்காலத்திலே, இதோ இவரே நம்முடைய தேவன்; இவருக்காக காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காக காத்திருந்தோம்: இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும் (ஏசா.25:9) ஆக இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட இவரேயன்றி, வேறொன்றையும் சீஷர்களுக்குள்ளே / விசுவாசிகளுக்குள்ளே அறியாதிருக்க அப்போஸ்தலர்கள் தீர்மானித்திருந்தார்கள். (1கொரி.2:12) இந்நிலையில் சீஷர்கள் பெருகினார்கள். (அப்.6:1) விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குரியவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை. அவர்கள் எல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது. (அப்.4:32,33)

7. இந்நிலையில் யூதாசுக்குள் நுழைந்த சாத்தான் விசுவாசிகளாகிய அனனியா, அவன் மனைவி சப்பீராளுக்குள் நுழைந்தான். (அப்.5:1) அவர்கள் கர்த்தருடைய ஆவியை சோதிக்கிறதற்கு ஒருமனப்பட்டார்கள். (அப்.5:9) மனுஷனிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னார்கள். (அப்.5:4) பிசாசானவன் பொய்யனும், பொய்க்கு பிதாவுமாயிருக்கிறான். (யோ.8:44) ஆக பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்ட சபைக்குள் சாத்தான் புகுந்தான். இதன் பலனாக சபைக்குள் கிறிஸ்துவின் ஆவியும் அந்திகிறிஸ்துவின் ஆவியும் செயல்படலாயின. கள்ள அப்போஸ்தலர்கள், கள்ளகபடமுள்ள வேலையாட்கள் கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தை தரித்துக்கொண்டு பெருகினார்கள். சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொள்வானே. சாத்தானுடைய ஊழியக்காரர் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தை தரித்துக்கொண்டார்களே. (2கொரி.11:13-15)

8. இதனால் மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத அநேக வஞ்சகர்கள் உலகத்திலே தோன்றினார்கள். இப்படிபட்டவர்களே வஞ்சகனும், அந்திகிறிஸ்துவுமாயிருக்கிறார்கள். (2யோ :7) This is a

deceiver and Antichrist. அந்தி கிறிஸ்து யார்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவன் (1யோ.2:22) இப்பொழுது பிதாவுக்கும் குமாரனுக்கும் அடுத்த ஐக்கியத்தை கவனியுங்கள். பிதா தவிர வேறு ஒருவனும் குமாரனை அறியான். குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை (பிதாவை) வெளிப்படுத்த சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர வேறொருவனும் பிதாவை அறியான். (மத்.11:27) இதிலிருந்து நாம் கற்றுக்கொண்டதென்ன? பிதா குமாரனை ஒருவனுக்கு வெளிப்படுத்த வேண்டும். அதேபோன்று குமாரனும் ஒருவனுக்கு பிதாவை வெளிப்படுத்த வேண்டும். அடுத்து நடந்ததென்ன? இயேசு தம்முடைய சீஷரை நோக்கி: மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்என்றார்.அதற்கு சீமோன் பேதுரு : நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு, சீமோன் பேதுருவை நோக்கி: மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற என் பிதா உனக்கு இதை வெளிப்படுத்தினார் என்றார். (மத்.16:13-17) பாருங்கள். பிதா, குமாரன் யார் என்று பேதுருக்கு வெளிப்படுத்தினார். அடுத்து குமாரன் பிதாவை வெளிப்படுத்துகிறார். பிலிப்பு, இயேசுவை நோக்கி: பிதாவை எங்களுக்கு காண்பியும் அது எங்களுக்கு போதும் என்றான். இயேசு: பிலிப்புவே என்னைக் கண்டவன் பிதாவைக்கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்கு காண்பியும் என்று எப்படி நீ சொல்லுகிறாய்? நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை விசுவாசியுங்கள் / நம்புங்கள் என்றார். இது முதல் நீங்கள் அவரை (பிதாவை) அறிந்தும், கண்டும் இருக்கிறீர்கள் என்றார். (யோ.14:5-11) இயேசு, பிதா யார் என்பதை இங்கு பிலிப்புக்கு வெளிப்படுத்தி காட்டினார். முடிவாக தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீர பிரகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது. (கொலோ.2:9)

9. ஆக நம்முடைய தேவனாகிய கர்த்தர், ஒருவரே கர்த்தர். (மாற்.12:29) அப்போஸ்தலர்கள் தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி இயேசுவே, கிறிஸ்து என பிரசங்கித்தார்கள். (அப்.5:42) அதன்பின் கிறிஸ்து இயேசுவே கர்த்தர் என்று பிரசங்கித்தார்கள். (2கொரி.4:5) ஆக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தான் நம்முடைய தேவனாகிய கர்த்தர். இவரிடத்தில் நாம் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் அன்புகூற வேண்டும். இதுதான் பிரதான கற்பனை. (மாற்.12:30) கவனியுங்கள் ஒரே பிதா நமக்கு உண்டு, அவர் தேவன். (யோ.8:41) ஆக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே பிதா குமாரன் பரிசுத்த ஆவிக்குரியவர். இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார். (1யோ.5:20) True God and Eternal Life.

10. ஆக நிசேயா, அதனாசியஸ் விசுவாச பிரமாணத்தை விசுவாசிப்போம், அறிக்கை செய்வோம், நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வோம் என்ற திருச்சி சகோ.கிறிஸ்டோபர் உபதேசம் பிசாசுக்கடுத்ததே. இவர் எழுதியபடி இந்த உபதேசம் கிறிஸ்துவின் அபோஸ்தலர்களுடையதும் அல்ல. அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணம் என்று ஒரு பிரமாணம் வேதவாக்கியங்களில் இல்லை. இது 100 கிராம ஊழிய உபதேசமாக இருக்கலாம். ஆனால்கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைவதற்கான(Ministry for the edifying of the body of Christ)உபதேசமாக இருக்க முடியாது.

11. இந்த பூமியின் பரப்பளவில், எத்தனையோ நாடுகள், எத்தனையோ மொழிகள், அவைகளை பேசும் மக்கள், அவர்கள் மத்தியில் நல்லவர்கள், தீயவர்கள், பற்பல விசுவாசங்களைக்கொண்ட மதத்தினர், அவர்களுடைய ஐக்கியத்திற்கென்று சபைகள் உண்டு. ஆனால் இந்த உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. (1யோ.5:19) ஆதலால் பொல்லாங்கனுடைய கிரியைகள் யாவும் பொல்லாதவைகளாயிருக்கிறது. இவனை ஜெயிக்க வேண்டுமானல், பிசாசை எதிர்த்து நிற்கவேண்டுமானால், தேவனுடைய வசனம் உங்களில் நிலைத்திருக்க வேண்டும். (1யோ.2:14) ஆக நீங்கள் ஒருவராலும்; அது பிசாசாக இருந்தாலும் சரி, கள்ளகபடமுள்ள வேலையாட்களாக இருந்தாலும் சரி, அதனாசியஸ் விசுவாச பிரமாணமாக இருந்தாலும் சரி, ஒரே தேவனை, ஒரே கர்த்தரை மூன்று கூறு போடும்பேய்தனத்திற்கடுத்ததிரித்துவ உபதேசமாக இருந்தாலும் சரி; அவைகளால் நாம் வஞ்சிக்கப்படாதபடிக்கு திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரம் அல்ல, அதன்படி செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். (யாக்.1:22) கேட்கிறதை மறக்கிறவர்களாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவர்கள் தங்கள் செய்கைகளில் பாக்கியவான்களாயிருக்கிறார்கள். ஏனெனில், கிரியை இல்லாத விசுவாசம் செத்தது. (யாக்.2:20) அதேபோன்று ஒருவனை இரட்சிக்க கூடாத திரித்துவ உபதேசம் செத்தது. திரித்துவத்தில் இரட்சிப்பு இல்லை. இரட்சிப்பு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தில்மாத்திரமே உள்ளது. (அப்.4:12) பிதா குமாரன் பரிசுத்த ஆவி என அறிக்கையிடுவதில் இல்லை.

12. உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. இவன் பொல்லாங்கன் (1யோ.2:13;3:12, 5:18,19) இவன் இப்பிரபஞ்சத்தின் தேவன் (2கொரி.4:4). இவன் இந்த உலகத்தின் அதிபதி. (யோ.14:30) இவன் சாத்தான் என்றும் (லூக்.10:18) பேலியாள் என்றும், (2கொரி.6:15) பிசாசு என்றும் (மத்.4:1, 1பேது.5:8) அழைக்கப்படுகிறான். இவன்தான் பொய்க்கு பிதா. (யோ.8:44) இவன் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொள்வான் (2கொரி.11:14) இவன் தந்திரமுள்ளவன் (2கொரி.11:3) இவன் வஞ்சனையுள்ளவன் (ஆதி.3:13) இவன் உலகம் அனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும், சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பம் (வெளி.12:9)

13. இயேசு கிறிஸ்துவை பற்றிய பிரசங்கமாகிய அப்.பவுலின் சுவிசேஷம் (ரோ.16:26) மறைபொருளாயிருந்தால், கெட்டுப்போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும். தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு (கெட்டுப்போகிறவர்களுக்கு) பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவன் / இந்த உலகத்தின் அதிபதி/ சாத்தான் அவர்கள் மனதை குருடாக்கினான். (2கொரி.4:3,5) பாருங்கள் ஒருவன் ராஜியத்தின் சுவிசேஷத்தை கேட்டும் உணராதிருக்கும்போது பொல்லாங்கன் வந்து அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதை பறித்துக் கொள்ளுகிறான். (மத்.13:19) இவ்வாறாக பிசாசு / சாத்தான் கிறிஸ்துவின் இரட்சிப்பின் சுவிசேஷம் பரவுவதற்கு தடையாக இருக்கிறான் / தடைசெய்கிறான்.

14. தேவன் ஆவியாயிருக்கிறார். (யோ.4:24) God is a Spirit. இவர் உலகத்தையும் அதில் உள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர். வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவர். (அப்.17:24) எல்லாருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும், சகலத்தையும் கொடுக்கிறவர். (அப்.17:25) இவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம். (அப்.17:28) இவர் யார்? கர்த்தர். (அப்.17:27) சங்கீதக்காரன் இவரை குறித்து; கர்த்தரே தேவன் என்று அறியுங்கள். அவரே நம்மை உண்டாக்கினார். நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்என்கிறான். (சங்.100:3) இந்த தேவன் காலம் நிறைவேறினபோது (எபே.4:5) மாம்சத்தில் வெளிப்பட்டார். (1தீமோ.3:16) இவர் இம்மானுவேல் – இதற்கு தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தமாம். (மத்.1:23) இவருக்கு இயேசு என்று பெயரிட்டார்கள் (மத்.1:21) இவர் யார்? கர்த்தராகிய கிறிஸ்து. (லூக்.2:11) அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

15. இப்பொழுது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து : இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பி (வெளி.22:6,16). தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு : இயேசு கிறிஸ்துவைப் பற்றி வெளிப்படுத்தின விசேஷம்.இது இயேசு கிறிஸ்துவின் திருவெளிப்பாடு.இது யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷமாக நமது கரத்தில் பரிசுத்த வேதாகமத்தின் கடைசி புத்தகமாக உள்ளது. தேவன் இதை இயேசு கிறிஸ்துவுக்கு அருளினார். கிறிஸ்து தம்முடைய தூதனை அனுப்பி யோவானுக்கு வெளிப்படுத்தினார்.

**யோவானுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பற்றிய வெளிப்பாடு :**


(1) இவர் இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர். (வெளி. 1:8)

(2) இவர் அல்பா, ஒமேகா ,ஆதியும் அந்தமுமானவர். (வெளி.1:8)


(3) இவர் முந்தினவரும், பிந்தினவரும் உயிருள்ளவருமாயிருக்கிறவர். (வெளி.1:17)


(4) இவர் மரித்தேன், ஆனாலும் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் என்கிறவர். (வெளி.1:18, 4:9)

(5) அடுத்து, இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. (கவனியுங்கள் மூன்று அல்ல, இரண்டு அல்ல, மாறாக ஒரேயொரு சிங்காசனம்) இந்த சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார். (மீண்டும் கவனியுங்கள் அந்த சிங்காசனத்தின் மேல் மூவர் அல்ல, இருவர் அல்ல, மாறாக ஒருவரே சிங்காசனத்தின் மத்தியில் வீற்றிருந்தார்). இவர் யார்? இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர். (வெளி.4:2,8)







**இதுதான் உலகம் அனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசின் திரித்துவ வழிபாட்டின் அலங்கோலம்.**

(6) இவரை குறித்து: நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர். உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும், சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது. (வெளி. 4:11)

(7) அந்த சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவரைக் குறித்து: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள். மேலும் தூதர்கள், மூப்பர்கள், நான்கு ஜீவன்கள்: சிங்காசனத்திற்கு முன்பாக விழுந்து தேவனை தொழுதுக்கொண்டார்கள். ஆமென், எங்கள் தேவனுக்கு துதியும் மகிமையும் ஞானமும், ஸ்தோத்திரமும், கனமும் வல்லமையும், பெலனும் சதா காலங்களிலும் உண்டாவதாக. ஆமென் என்றார்கள். (வெளி.7:10-12)

(8) இப்பொழுது சிங்காசனத்தின் மத்தியில் யார்? ஆட்டுக்குட்டியானவர் (வெளி.7:17) சிங்காசனத்தின் மத்தியில் பிதாவும், வலது இடது பக்கத்தில் குமாரனும் பரிசுத்த ஆவியும் இல்லை.மாறாகஒரே சிங்காசனம், அந்த சிங்காசனத்தின் மத்தியில் ஆட்டுக்குட்டியானவரேயன்றி வேறு யாரும் கிடையாது.

(9) சதாகாலங்களிலும் உயிரோடுயிருக்கிறவருமானவர்: வானத்தையும் அதில் உள்ளவைகளையும் பூமியையும் அதிலுள்ளவைகளையும், சமுத்திரத்தையும், அதிலுள்ளவைகளையும் சிருஷ்டித்தார். (வெளி.10:7) அவர் உலகத்தில் இருந்தார். உலகம் அவரால் உண்டாயிற்று. உலகமோ அவரை அறியவில்லை. He was in the World, The World was made by him but the World knew him not.

(10) இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தராகிய தேவன். (வெளி.11:17)

(11) கர்த்தாவே, தேவரீர் ஒருவரே பரிசுத்தர்(வெளி.15:4)

(12) இருக்கிறவரும், இருந்தவரும், பரிசுத்தமாகிய தேவரீர் நியாயந்தீர்க்க நீதியுள்ளவராயிருக்கிறீர். (வெளி.16:5)

(13) சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள். (வெளி.16:7) உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தவர்களையும், நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு

கிறிஸ்து (2தீமோ.4:1)அன்றியும்,பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாக தொழுது கொள்ளுகிறீர்கள் (1பேது1:17)

(14) நியாயத்தீர்ப்பு கொடுக்கும் தேவனாகிய கர்த்தர் வல்லமையுள்ளவர். (வெளி.18:8)

(15)அல்லேலூயா, இரட்சனியமும் மகிமையும், கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது. இவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள். (வெளி.19:17)

(16) ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும், ராஜாதி ராஜாவுமாயிருக்கிறார். (வெளி.17:14)

(17) பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம், 24 மூப்பர்கள், 4 ஜீவன்கள் வணக்கமாய் விழுந்து: ஆமென், அல்லேலூயா என்று சொல்லி சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் தேவனை தொழுதுக்கொண்டார்கள். (வெளி.19:4)

(18) சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன், இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார். (வெளி.21:5)

(19) சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர்: நான் அல்பாவும், ஒமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்கிறார். (வெளி.21:6)

(20) சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம் (வெளி.21:22) ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு (வெளி.21:23)

(21) சிங்காசனத்தில் தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் (வெளி.22:1,3)

(22) தேவனாகிய கர்த்தர் அவர்கள் மேல் பிரகாசிப்பார். (வெளி.22:5)

(23) கர்த்தராகிய தேவனானவர் தம்முடைய தூதனை அனுப்பினார். (வெளி.22:6,16)

(24) இதோ சீக்கிரமாய் வருகிறேன். (வெளி.22:7) இதோ சீக்கிரமாய் வருகிறேன். (வெளி.22:12) நான் அல்பாவும், ஒமேகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும், பிந்தினவருமாயிருக்கிறேன் (வெளி.22:13)

(25) நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன் (வெளி. 22:16)

(26) இவைகளை சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும். (வெளி.22:20)

(27) ஏழு தூதர்களில் ஒருவன் என்னிடத்தில் வந்து: நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்கு காண்பிக்கிறேன் என்று சொல்லி பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின்மேல் என்னை ஆவியில் கொண்டு போய், தேவனுடைய மகிமை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தை விட்டு தேவனிடத்திலிருந்து இறங்கி வருகிறதை எனக்கு காண்பித்தான். (வெளி.21:9,10) ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரமே அதில் பிரவேசிப்பார்கள். (வெளி.21:27)

(28) நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாகஆமென். (வெளி.22:21)

16. மேற்கண்ட வேதவாக்கியங்களிலிருந்து, நாம் இயேசு கிறிஸ்துவின் தெய்வீக தன்மையை கண்டோம். இவரே இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர், இவரே அல்பா, ஒமேகா, ஆதியும் அந்தமுமானவர். இவரே முந்தினவரும், பிந்தினவரும் உயிரோடிருக்கிறவருமானவர். வானத்தில் ஒரேயொரு சிங்காசனம். அதன் மத்தியில் ஆட்டுக்குட்டியானவர் மாத்திமே. இவர் சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர். இவர் சிருஷ்டி கர்த்தா. தேவனும் இவரே, ஆட்டுக்குட்டியானவரும் இவரே. இவரே தொழுகைக்குரிய தேவன். இவரே சர்வ வல்லமையுள்ள கர்த்தராகிய தேவன். இவர் ஒருவரே பரிசுத்தர். இவரே நியாயாதிபதி. இவரே கர்த்தாதி கர்த்தா, ராஜாதி ராஜா. இவரே தேவனாகிய கர்த்தர், இவரே சகலத்தையும் புதிதாக்குகிறவர். இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர், ஒருவரே கர்த்தர். (மாற்.12:29) இவருடைய நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

17. வேதவாக்கியங்களில் காணப்படும் தேவத்துவத்துக்கடுத்த காரியங்களை விசுவாசியமால், பிதா தேவன், குமாரனும் தேவன், பரிசுத்த ஆவியும் தேவன் ; பிதா கர்த்தர், குமாரன் கரத்தர், பரிசுத்த ஆவியும் கர்த்தர் ; ஆனாலும் மூன்று தேவர்கள் இல்லை, மூன்று கர்த்தர்கள் இல்லை, தேவன் ஒருவரே, கர்த்தரும் ஒருவரே என பரத்திலிருந்து இறங்கி வராத ஞானத்தைக்கொண்டு லௌகிக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிற திரித்துவ நிசேயா, அதனாசியஸ் விசுவாச பிரமாணத்தைக் கொண்டு ; ஒருவனை தன்மார்க்கத்தாகும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிந்து அவனை உங்கள் மார்க்கத்தானாக்கி, உங்களிலும் இரட்டிப்பான நரகத்தின் மகனாக்கும் திரித்துவ ஸ்தாபன போதகர்களே

உங்களுக்கு ஐயோ! மதிகேடனே குருடனே, எது முக்கியம்? தேவ ஆவியினால் அருளப்பட்ட தேவனுடைய வார்த்தையா அல்லது நிசேயா, அதனாசியஸ் விசுவாச பிரமாணமா? குருடர்களுக்கு வழிகாட்டும் குருடர்களே எது முக்கியம்? உங்கள் ஐக்கியம் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலா அல்லது ஆத்தும இரட்சிப்புக்கு வழிகாட்டாததும், ஒன்றுக்கும் உதவாததுமாகிய இந்த ஸ்தாபன சபைகளுடனா? மாய்மாலக்காரரே உங்களுக்கு எது முக்கியம்? தேவன் உங்களை தெரிந்துக்கொள்வதா அல்லது நீ தேவனை தெரிந்துக்கொள்வதா? இப்படியே நான் எழுதிக்கொண்டே போகலாம். அதற்கு முடிவு இராது.

18. முடிவாக திரித்துவ ஸ்தாபன சபை தலைவர்களே நீங்கள் எந்த பதவியில் இருந்தாலும் திரித்துவ கொள்கை போதிக்கும் பிதா குமாரன் பரிசுத்த ஆவி என உச்சரித்து பாவமன்னிப்புக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் கள்ள கபடமுள்ள வேலையாட்களே உங்களை குறித்துத்தான் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிற வேதவாக்கியங்களில் கீழ்கண்ட எச்சரிக்கைகள்.

(1) 2யோ :7 ல் கூறப்பட்டுள்ள வஞ்சகனும் அந்தி கிறிஸ்துவும் நீங்களே.

(2) மத்.7:15 ல் ஆட்டுத்தோலை போர்த்திக்கொண்டு, உள்ளத்தில் பட்சிக்கிற ஓநாய்கள் நீங்களே. உங்களுடைய லட்சணங்களை உங்கள்திரித்துவ ஜாமக்காரனே கிழி கிழி என்று கிழிக்கிறாரே?

(3) மத்.7:15 ல் கூறப்பட்டுள்ள கள்ள தீர்க்கத்தரிசிகள் திரித்துவ உபதேசத்தில் உள்ள நீங்களே. நீங்கள் உங்கள் திரித்துவ போதனைகளினால் மக்களை அவர்கள் தங்கள் பந்தயப் பொருளை இழந்துபோகத்தக்கதாக வஞ்சிக்கிறீர்களே?

(4) மத்.24:24 உங்கள் மத்தியில் தான் கள்ள கிறிஸ்துக்கள் எழும்பியுள்ளார்கள். கள்ள கிறிஸ்து – தவறான அபிஷேகம் – தவறான போதனை, களைகளின் மீது விழும் மழை.

(5) 2கொரி.11:13 கள்ள அபோஸ்தலர்களும் உங்கள் மத்தியில் உண்டு. திரித்துவத்தை போதிக்கும் கள்ள அபோஸ்தலர்கள் உங்கள் மத்தியில் உண்டு. ஏனென்றால் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் பிரசங்கியாத வேறொரு சுவிசேஷத்தை உங்கள் அப்போஸதலர்கள் பிரசங்கிக்கிறார்கள்.

(6) 2கொரி.11:13 திரித்துவத்தை உபதேசிக்கும் மேய்ப்பர்கள், பாஸ்டர்கள் மற்றும் ஸ்தாபன சபை ஊழியர்கள் அனைவரும் கள்ள கபடமுள்ள வேலையாட்களே.ஒருவன் தேவனுடைய வார்த்தையை கேட்டு (அப்.2:38) விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்கு அவ்வசனத்தை அவன் இருதயத்திலிருந்து எடுத்துப்போடும் மோகன்சிலாசரஸ் யார்? பிசாசுதானே! (லூக்.8:12) அப்.2:38 யை வாசிக்கும்போது இந்த கள்ளகபடமுள்ள வேலையாள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்பதை மறைப்பது ஏன்?

(7) அப். 20:29,30 கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலர் உபதேசத்தில் நிலைத்திறாது அதனாசியஸ் உபதேசத்தில் நிலைத்து தங்கள் சாதூரியமான பேச்சினால் மக்களை வசிகரிக்கும், கொடுமையால் விசுவாசிகளை அடக்கி ஆளும் ஸ்தாபன சபை ஊழியர்களே நீங்கள் தானே மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்கள்.

(8) 2தீமோ.3:5 ஒரே தேவன், அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என மேற்பூச்சாக பேசி உள்ளே ஒரே தேவன் தான், ஆனால் அதில் மூன்று தேவர்கள், மூன்று கர்த்தர்கள் உள்ளடங்குவார்கள் என்று கூறி ஒளியின் தூதனின் வேஷத்தை தரித்த நீங்கள் உள்ளே ஓநாய், ஆனால் வெளியே ஆட்டுத்தோலை போர்த்திக்கொண்டு திரிகிறீர்கள்.

(9) 2தீமோ.2:17,18 சத்தியத்தை விட்டு விலகி, சத்தியத்தை மறுதலித்து, தேவனுடைய வார்த்தையை உங்கள் முதுகிற்கு பின்னாலே எறிந்து பணத்திற்காகவும், பெயருக்காகவும், புகழுக்காகவும் விசுவாசத்தை விட்டு விலகி, அநேக வேதனைகளாலே நீங்கள் உங்களை குத்திக்கொண்டீர்கள். அதற்கு உங்கள் பண ஆசையே காரணம். மோகன்சிலாசரஸ், டி ஜிஎஸ் தினகரன் குடும்பம், ஏஞ்சல் டி வி போன்றவர்கள் பணத்திற்காக அறிந்த சத்தியத்தை மறுதலித்தவர்கள் தானே.

(10)யோ.12:42 ஒரே தேவன், அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. பாவமன்னிப்பு / ஞானஸ்நானம், இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே என அறிந்தும், பணத்திற்காகவும், புகழுக்காகவும் திரித்துவத்திற்கு தாவி ஓடி அடைக்கலம் கொண்ட மறைந்த டி ஜி எஸ் குடும்பம் போன்று நாய்தான் கக்கினதை திரும்ப தின்னுமாற்போன்று திரும்பினவர்கள் உங்களிடத்தில் அநேகர் உண்டே.

(11) எபே.4:14 பாவமன்னிப்புக்கு – கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம். இது நாம் இரட்சிக்கப்படும்படிக்கு கொடுக்கப்பட்ட நாமம். இதை நன்கு அறிந்தும், இது அப்போஸ்தலரின் உபதேசம் என அறிந்தும், இயேசு இதை சொல்லவில்லை, ஆதலால் நாங்கள் மத்.28:19 ன் படிதான் இயேசு சொன்னவாறே ஞானஸ்நானம் கொடுப்போம் என தந்திரமாக போதிக்கும் திரித்துவ கூட்டத்தாரே உங்களுக்கு தானே இந்த எச்சரிக்கை.

இன்னும் அநேக எடுத்துக்காட்டுக்கள் உண்டு. அவைகள் யாவும் திரித்துவ, கள்ளகபடமுள்ள வேலையாட்களுக்காகவே எழுதப்பட்டுள்ளது.

19. மக்களை வஞ்சிக்கிற மேய்ப்பன் / பாஸ்டர் யார்?
அ. மந்தையின் தவறுகளை கண்டு கண்டிக்காத மேய்ப்பன் வஞ்சகன். பெண்கள் ஊழியம் செய்தல், பெண்கள் புறம்பாக தங்களை அலங்கரித்தல், பெண்கள் பொதுஸ்தலங்களுக்கு சென்று பணிபுரிதல் இவைகள் சபைகளில் மேய்ப்பர்களால் கண்டிக்கப்படுதில்லையே.
ஆ. தனது பிழைப்புக்காக தெரு தெருவாக, ஊர் ஊராக சுற்றித்திரியும் பாஸ்டர் ஒரு வஞ்சகனே. இவன் ஊழியத்தின் பேரில் ஒரு பிழைப்பு நடத்துகிறான். கை கால்கள் நன்கு திடகாத்திரமாக இருந்தும் சோம்பலின் அப்பத்தை சாப்பிட விரும்புகிறானே. இவன் வஞ்சகன் அன்றி வேறு யார்?
இ. இன்று அநேக ஊழியர்கள் வாடகை சூட் அணிந்து, டை கட்டி, பகட்டாக விலை உயர்ந்த பைபிளை கரத்தில் வைத்துக்கொண்டு குருடனுக்கு வழிகாட்டும் குருடர்களாக இருக்கிறார்களே. பிரசங்க அழைப்பிற்கு கிரயம் பேசுகிறவனேயன்றி வஞ்சகன் யார்?

20. ஒரு உண்மையான ஊழியக்காரன் யார்? இதர ஊழியர்கள், விசுவாசிகள் இவனோடு ஊழியத்தின் பாதையில் இசைந்து சென்றாலும், செல்லாவிட்டாலும் அல்லது இவனை முற்றிலுமாக ஒதுக்கி தள்ளினாலும், எல்லாரும் இவனை கைவிட்டாலும், அது அவனை எந்த விதத்திலும் சேதப்படுத்தாது. ஏனென்றால் கர்த்தர் அவனுக்கு துணையாக நின்று, அவனுடைய ஊழியத்தை அவன் நிறைவேற்றபொருளாதார தேவைகளை சந்தித்து, அவனை எல்லா தீமையிலிருந்தும் இரட்சித்து,பாதுகாத்து தம்முடைய பரம ராஜியத்தை அடையும்படி அவனை காப்பாற்றுகிறார். அவருக்கு சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென். கிருபையானது உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக.

செப்டம்பர் 2020.

கிறிஸ்துவின்அன்பில்
சகோ.காலேப்யோசுவா

Publication Information to the Department of Posts

**If Undelivered**
**Please Return to**

**Caleb Joshua**
**32, Jemi Ethiraj Nagar**
**Erayamangalam Road**
**Mappedu, Perambakkam (Via)**
**Thiruvallur District – 631402.**
**Mobile No. 9444701953**

**PRINTED BOOK**
Subject to **Clause No. 128 P.O. GuideRules.**
Postal Licence, Registration, Permission notrequired to mail it.**It is an Ordinary Post.**
**Current Postal Rate.Rs. One per every 100 gms**
**To:Dr.Rev,Pr,Bro,Sis.,**

**This Printed Book, Yesuvae Vaarum Edited, Owned and Published by Caleb Joshua from his above address and Printed by V.R. Sermakani, Sakthi Process, 2/1F Kummalamman Kovil St, Tondiarpet, Chennai. 600 081.Ph: 044- 25956006.**